நாகர்கோவிலில் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் தர்னா

நாகர்கோவில், செப். 3: தமிழ்நாடு ஓய்வு பெற்ற பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள் நலச் சங்கத்தின் சார்பில், ஓய்வூதியர்களுக்கு மருத்துவ காப்பீட்டு திட்டத்தை அமல்படுத்த வலியுறுத்தி, நாகர்கோவிலில் செவ்வாய்க்கிழமை தர்னா போராட்டம் நடைபெற்றது.

வேப்பமூடு சந்திப்பு பூங்கா முன் நடைபெற்ற இப்போராட்டத்துக்கு, மாவட்டத் தலைவர் அய்யப்பன் பிள்ளை தலைமை வகித்தார். மாநில தலைவர் முரளிதரன், துணைப் பொதுச் செயலாளர் மனோகர ஜஸ்டஸ், மாவட்டச்செயலாளர் அலெக்சாண்டர், பொருளாளர் பத்மதேவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு காசில்லா மருத்துவ சிகிச்சையை உறுதிப்படுத்த வேண்டும், சிகிச்சை செலவை குறைத்து வழங்கும் காப்பீட்டு நிறுவனங்கள் மீதும், அதிக கட்டணம் வசூலிக்கும் மருத்துவமனைகள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட 7 அம்ச கோரிக்கைகள் இதில் வலியுறுத்தப்பட்டன. போராட்டத்தில் நூற்றுக்கணக்கான ஓய்வூதியர்கள் கலந்து கொண்டனர்.

மார்த்தாண்டம் அருகே பெண்ணிடம் பர்ஸ் திருடியவர் கைது

களியக்காவிளை, செப். 3: மார்த்தாண்டம் அருகே ஓடும் பேருந்தில் பெண்ணிடம் பர்ஸ் (கைப்பை) திருடிய பெண்ணை போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

மார்த்தாண்டம் அருகேயுள்ள சிராயன்குழி கல்லுவிளையைச் சேர்ந்தவர் சுபாஷினி (40). இவர் இருநாள்களுக்கு முன் வெட்டுவெந்நியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட உறவினரை பார்க்க, மார்த்தாண்டம் – தேங்காய்ப்பட்டினம் பேருந்தில் சென்றார். பேருந்தில் இவரை உரசியவாறு ஒரு பெண் நின்றாராம். அவர் அடுத்த நிறுத்தத்தில் இறங்கிச் சென்றுள்ளார். அதற்கு அடுத்த நிறுத்தத்தில் இறங்கிய சுபாஷினி, பையில் பொருள்களுடன் வைத்திருந்த பர்ஸை பார்த்தபோது அது திருடு போனது தெரியவந்தது. அதில் ரூ. 1,200, இரண்டு கைப்பேசிகள், குடும்ப அட்டை உள்ளிட்டவை இருந்ததாம்.

இதைத் தொடர்ந்து சுபாஷினி செவ்வாய்க்கிழமை மீண்டும் மார்த்தாண்டம் வந்தபோது ஏற்கனவே பேருந்தில் சந்தேகப்படும் வகையில் வந்த பெண், அங்குள்ள பேருந்து நிறுத்தத்தில் நின்றதை கவனித்தார். தொடர்ந்து உறவினர்களுக்கு சுபாஷினி தகவல் தெரிவித்தார். உறவினர்கள் வந்து அப்பெண்ணை பிடித்து மார்த்தாண்டம் போலீஸாரிடம் ஒப்படைத்தனர். அவர் கன்னியாகுமரியைச் சேர்ந்த சக்தி மனைவி தேவி என்றும், சுபாஷினியிடம் பர்ஸை திருடியதையும் ஒப்புக்கொண்டார். அவரை போலீஸார் கைது செய்தனர். இது குறித்து மார்த்தாண்டம் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

திற்பரப்பு அருகே முந்திரி ஆலையை முற்றுகையிட்டு தொழிலாளர்கள் போராட்டம்

குலசேகரம், செப். 3: குலசேகரம் அருகே முந்திரி ஆலையை முற்றுகையிட்டு தொழிலாளர்கள் செவ்வாய்க்கிழமை போராட்டம் நடத்தினர்.

திற்பரப்பு பழைய பாலம் சந்திப்பில் கேரள மாநிலத்தவர் நடத்தி வந்த முந்திரி ஆலை 2 ஆண்டுகளுக்கு முன்பு மூடப்பட்டது. ஆனால், அந்த ஆலையில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு பணிக்கொடை வழங்கப்படவில்லையாம். கடந்த ஆண்டு ஆலை நிர்வாகம் ஆலையில் தளவாடப் பொருள்களை எடுத்துச் செல்ல முயன்றபோது, பணிக்கொடை கோரி தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினர். அப்போது நிர்வாகத்தினர் சமரசம் பேசி பொருள்களை எடுத்துச் சென்றனர்.

தொழிலாளர்களுடன் பேச்சு நடத்துகிறார் காவல் ஆய்வாளர் மீனா.

இந்நிலையில் ஆலை நிர்வாகம் வங்கியில் பெற்ற கடனுக்காக ஆலையைக் கைப்பற்றி மார்த்தாண்டம் பகுதியைச் சேர்ந்த ஒரு நிறுவனத்திற்கு வங்கி விற்பனை செய்துள்ளது. இதையடுத்து, ஆலையை வாங்கிய நிறுவனத்தினர் செவ்வாய்க்கிழமை ஆலைக்கு வந்து சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டனர்.

இதையறிந்த தொழிலாளர்கள் ஆலையை முற்றுகையிட்டு, அங்கு மரங்களை வெட்டிக் கொண்டிருந்தவர்களை தடுத்தனர். குலசேகரம் காவல் ஆய்வாளர் மீனா தலைமையில் போலீஸார் இருதரப்பினரிடமும் பேச்சு நடத்தினர். இதில் உடன்பாடு ஏற்படாததால், காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று பேசினர். அப்போது, ஏற்கனவே ஆலையை வைத்திருந்தவர்களிடமிருந்து பணிக்கொடையை 3 நாள்களுக்குள் பெற்று கொடுக்க வேண்டுமென்றும், அதுவரை ஆலை வளாகத்தில் எவ்வித பணிகளையும் செய்யக் கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டது. இதையேற்று அனைவரும் கலைந்து சென்றனர்.

பயிர் காப்பீடு தொகை வழங்கக் கோரி விவசாயிகள் போராட்டம்

கோவில்பட்டி, செப். 3: பயிர் காப்பீடு தொகை வழங்க வலியுறுத்தி, கோவில்பட்டியில் விவசாயிகள் தலையில் முக்காடு அணிந்து, அக்னி சட்டி ஏந்தி நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் பி.அய்யலுசாமி தலைமையில் கயத்தாறு ஒன்றிய தலைவர் செல்லத்துரை, தோணுகால் ஊராட்சி தலைவர் சுந்தர்ராஜ், குப்பனாபுரம் ஊராட்சி தலைவர் உடையார் பாண்டியன், காங்கிரஸ் வர்த்தக பிரிவைச் சேர்ந்த ராஜா மற்றும் விவசாயிகள் கோவில்பட்டி கோட்டாட்சியர் அலுவலகத்துக்கு தலையில் முக்காடு அணிந்து, அக்னி சட்டி ஏந்தி வந்து, 2023-24-ஆம் ஆண்டுக்குரிய பயிர் காப்பீடு தொகை வழங்க வலியுறுத்தினர். பின்னர், கோட்டாட்சியர் மகாலட்சுமியிடம் மனு வழங்கினர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த டிசம்பர் மாதம் பெய்த மழை காரணமாக பயிர்கள் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் 100 சதவீதம் காப்பீடு தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

SOUTH INDIAN Bank
Experience Next Generation Banking

தி சௌத் இந்தியன் வங்கி லிட., மதுரை பிராந்திய அலுவலகம்:
முதல் மாடி, YMCA பில்டிங், அல்டோரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. ro1015@sib.co.in, Ph: 0452 2300205

இ- ஏல விற்பனை அறிவிப்பு

Ref: RO/SAR/SN/82/2024-25 தேதி: 02.09.2024

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

1) திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ், M/s. பவானி டிரேடர்ஸ் உரிமையாளர், 8/70-1, S.M.பில்டிங், பெரிஞ்சகோணம், செங்கோடி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.
மேலும் இருப்பிடம் 4-50, ஜோஸ் இல்லம், பெரிஞ்சகோணம், செங்கோடி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.
மேலும் இருப்பிடம் 17-242, SM காம்ப்ளக்ஸ், முட்டைக்காடு, குமாரபுரம் P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629164.
2) திரு. S.M. காட்வின் ஜோஸ், ஜனா இல்லம், 4/71-1, பெரிஞ்சகோணம், செங்கோடி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.
3) திருமதி. ஜோபினா பவானி எட்வின் ஜோஸ் @ ஜோபினா, 24-15, மேடவிளை, முட்டைக்காடு, குமாரபுரம், கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.
மேலும் இருப்பிடம் 4-50, ஜோஸ் இல்லம், பெரிஞ்சகோணம், செங்கோடி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.
4) திரு. செல்வராஜ் முத்தையன், மேக்கோடு, பெரிஞ்சகோணம், செங்கோடி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.
மேலும் இருப்பிடம் 4-50, ஜோஸ் இல்லம், பெரிஞ்சகோணம், செங்கோடி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., தக்கலை கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அடையாள சுவாதீனம் (ஷட்டம் எண்.1 to 4) & கொள்நிலை சுவாதீனம் (ஷட்டம் எண்.5 & 6) செய்யப்படிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 01.09.2024 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட், தக்கலை கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.3,34,51,531.66 (ரூபாய் மூன்று கோடியே முப்பத்து நான்கு லட்சத்து ஐம்பத்தொராயிரத்து ஐநூற்றி முப்பத்தொன்று மற்றும் பைசா அறுபத்தாறு மட்டும்) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே","அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 27.09.2024 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தார் / உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்:
ஷட்டம் எண்.1: திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ்
ஷட்டம் எண்.2: திரு. காட்வின் ஜோஸ்
ஷட்டம் எண்.3: திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ்
ஷட்டம் எண்.4: திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ்
ஷட்டம் எண்.5: திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ்
ஷட்டம் எண்.6: திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ்

சொத்து விபரம்:- ஷட்டம் எண்.1: கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, குமாரபுரம் (கோத்தநல்லூர்) கிராமம், ரீசர்வே எண்.533/4A-ல் அமைந்துள்ளதும், குமாரபுரம் ஸ்பெஷல் கிரேடு பஞ்சாயத்தில் சுமார் 1439 சதுரடி மொத்த கட்டுமானப் பரப்பில் கதவு எண். 17/239, 240, 241, 242, 242/1 ஆகியவற்றைக் கொண்ட கட்டடத்துடன் கூடிய 1.50 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதுள்ள பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்த்து திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து. தக்கலை சார்பதிவகத்தில் 29.03.2006 தேதியிட்ட விற்பனைப் பத்திர எண்.926/2006-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: சந்திரசேகரன் நாயருடைய சொத்து. தெற்கே: செல்லையனுடைய சொத்து, கிழக்கே: சரோஜம் சொத்து. மேற்கே: ரோடு.

ஷட்டம் எண்.2: கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, மேக்கோடு கிராமம், ரீசர்வே எண்.545/12A-ல் அமைந்துள்ளதும், வேர்னிம்பி நகர பஞ்சாயத்தில் சுமார் 1092 சதுரடி கட்டுமானப் பரப்பில் கதவு எண். 4-71/1-ஐ கொண்ட கட்டடத்துடன் கூடிய 17.50 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதுள்ள பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்த்து திரு. காட்வின் ஜோஸ் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து. வேர்னிம்பி சார்பதிவகத்தில் 17.01.2005 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திர எண்.108/2005-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: ரோடு. தெற்கே: வின்சென்ட்-ன் சொத்து. கிழக்கே: ஜஸ்டின் ஜோஸுடைய சொத்து. மேற்கே: பொன்னையனுடைய சொத்து.

ஷட்டம் எண்.3: கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, மேக்கோடு கிராமம், பழைய சர்வே எண்.1831, ரீசர்வே எண்.543/16-ல் அமைந்துள்ளதும், வேர்னிம்பி பஞ்சாயத்தில் சுமார் 2905 சதுரடி அஸ்திவாரப் பரப்பில் கதவு எண். 4/50-ஐ கொண்ட கட்டுமான பணியிலிருக்கும் கட்டடத்துடன் கூடிய 8.50 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதுள்ள பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்த்து திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து. வேர்னிம்பி சார்பதிவகத்தில் 29.01.2018 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திர எண்.243/2018-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: அய்யாக்கண் & செல்வராஜ் ஆகியோரின் சொத்து. தெற்கே: ரோடு. கிழக்கே: மோகன்தாஸுடைய சொத்து. மேற்கே: கோவில் சொத்து.

ஷட்டம் எண்.4: கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, மேக்கோடு கிராமம், பழைய சர்வே எண்.1821 ரீசர்வே எண்.545/12A-ல் அமைந்துள்ளதும், வேர்னிம்பி நகர பஞ்சாயத்தில் சுமார் 1100 சதுரடி கட்டுமானப் பரப்பில் கதவு எண். 8/70/1-ஐ கொண்ட கட்டடத்துடன் கூடிய 5 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதுள்ள பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்த்து திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து. 10 சென்ட் இடத்தில் ஒரு பகுதியை விற்ற பிறகு வழங்கப்பட்ட இடமாகும். இது வேர்னிம்பி சார்பதிவகத்தில் 17.01.2005 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திர எண்.107/2005-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட பகுதியின் எல்லைகள்: வடக்கே: அனிக்கு விற்கப்பட்ட சொத்து. தெற்கே: முருகேசனுடைய சொத்து. கிழக்கே: ரோடு. மேற்கே: ஜஸ்டின் ஜோஸுடைய சொத்து.

ஷட்டம் எண்.5: கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, குமாரபுரம் (கோத்தநல்லூர்) கிராமம், பழைய சர்வே எண். 3515, ரீசர்வே எண்.393/8-ஐன் (விளவன் கோடு பட்டா எண்.5088-ன் கீழ் வரும்) 40 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதுள்ள பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்த்து திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து. தக்கலை சார்பதிவகத்தில் 28.06.2010 தேதியிட்ட விற்பனைப்பத்திர எண்.2069/2010-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: செல்லக்கண் & பரமேஸ்வரன் சொத்து (RS.No.393/1,2-ஐன் நிலம்) தெற்கே: பஞ்சாயத்து ரோடு & திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ்-ன் சொத்து (RS.No. 393/17A-ஐன் நிலம்). கிழக்கே: ஜோஸப் & சிவன் நாடாரின் சொத்து (RS.No. 393/3,7-ஐன் நிலம்). மேற்கே: அனாலச்சி குளம் (RS No 393/1 & RS No 393/9-ஐன் நிலம்).

ஷட்டம் எண்.6: கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, தக்கலை கிராமம், பழைய சர்வே எண்.1184A, ரீசர்வே எண். 101/12A-ல் அமைந்துள்ள 49.20 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதுள்ள பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்த்து திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து. தக்கலை சார்பதிவகத்தில் 29.01.2018 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திர எண்.351/2018-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: அல்போன்சா, சுவாமி & ரத்தினமோனி ஆகியோரின் சொத்து. தெற்கே: பஞ்சாயத்து நடைபாதை. கிழக்கே: பஞ்சாயத்து நடைபாதை & ராஜனுடைய சொத்து. மேற்கே: சுல்தானுடைய சொத்து.

நிர்ணயிக்கப்பட்ட தொகை	ஷட்டம் எண்.1 : ரூ.31,96,000/- (ரூபாய் முப்பத்தோரு லட்சத்து தொன்னூற்றி ஆறாயிரம் மட்டும்) ஷட்டம் எண்.2: ரூ.69,66,000/- (ரூபாய் அறுபத்தொன்பது லட்சத்து அறுபத்தாறாயிரம் மட்டும்) ஷட்டம் எண்.3: ரூ.93,28,000/- (ரூபாய் தொன்னூற்றி மூன்று லட்சத்து இருபத்தெட்டாயிரம் மட்டும்) ஷட்டம் எண்.4: ரூ.29,01,000/- (ரூபாய் இருபத்தொன்பது லட்சத்து ஒராயிரம் மட்டும்) ஷட்டம் எண்.5: ரூ.45,00,000/- (ரூபாய் நாற்பத்தைந்து லட்சம் மட்டும்) ஷட்டம் எண்.6: ரூ.77,49,000/- (ரூபாய் எழுபத்தேழு லட்சத்து நாற்பத்தொன்பதாயிரம் மட்டும்)
முன் வைப்புத் தொகை (EMD)	ஷட்டம் எண்.1 : ரூ.3,19,600/- (ரூபாய் மூன்று லட்சத்து பத்தொன்பதாயிரத்து அறுநூறு மட்டும்) ஷட்டம் எண்.2: ரூ.6,96,600/- (ரூபாய் ஆறு லட்சத்து தொன்னூற்றி ஆறாயிரத்து அறுநூறு மட்டும்) ஷட்டம் எண்.3: ரூ.9,32,800/- (ரூபாய் ஒன்பது லட்சத்து முப்பத்திரண்டாயிரத்து எண்ணூறு மட்டும்) ஷட்டம் எண்.4: ரூ.2,90,100/- (ரூபாய் இரண்டு லட்சத்து தொன்னூறாயிரத்து நூறு மட்டும்) ஷட்டம் எண்.5: ரூ.4,50,000/- (ரூபாய் நான்கு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஷட்டம் எண்.6: ரூ.7,74,900/- (ரூபாய் ஏழு லட்சத்து எழுபத்து நான்காயிரத்து தொள்ளாயிரம் மட்டும்)
ஏல அதிகரிப்புத் தொகை	ரூ.50,000/-
இ-ஏல நேரம் மற்றும் தேதி	27.09.2024 அன்று 11.30 AM முதல் 12.30 PM வரை (விற்பனை முடியும் வரை 5 நிமிட வரம்பற்ற தன்நீட்சியுடன்)
வங்கிக்கு தெரிந்த வில்லங்கங்கள்	01.04.2015 முதல் 25.04.2022 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை. (ஷட்டம் எண்.1-க்காக) 01.01.2004 முதல் 11.05.2022 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை. (ஷட்டம் எண்.2 & 4-க்காக) 01.04.2010 முதல் 27.04.2022 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை. (ஷட்டம் எண்.3-க்காக) 01.01.2004 முதல் 25.04.2022 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை. (ஷட்டம் எண்.5 & 6-க்காக)

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட் (Secured Creditor)-ன் இணையதளம் அதாவது www.southindianbank.com-ல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும். https://bankauctions.in என்ற இணையதளத்திலும் விபரங்களை அறியலாம்.

சொத்து ஆய்வு, இ-ஏல நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் அல்லது ஏலங்களை சமர்ப்பித்தல் ஆகியவை பற்றி மேலும் விபரமாக அறிவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியையோ (Ph.No. 0452-2300205/9894647220) அல்லது தி சௌத் இந்தியன் வங்கி லிட் தக்கலை கிளையின் மொபைல் எண் 63838 56282-ல் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

இடம்: மதுரை அங்கீகாரம் பெற்ற அலுவலர்

கொடியங்குளத்தில் மனித உரிமை மீட்பு நாள் கூட்டம்

கூட்டத்தில் பேசுகிறார் புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் க. கிருஷ்ணசாமி.

விளாத்திகுளம், செப்.3: ஓட்டப்பிடாரம் அருகே கொடியன்குளம் கிராமத்தில் புதிய தமிழகம் கட்சி சார்பில் 30ஆவது ஆண்டு மனித உரிமை மீட்பு நாள் கூட்டம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு புதிய தமிழகம் கட்சி நிறுவனர்- தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி தலைமை வகித்துப்பேசுகையில் ஓட்டப்பிடாரம் வட்டம் மிகவும் வறட்சி பகுதியாகும். இதைச் சுற்றிலும் பல காற்றாலைகள் அமைக்கப்பட்டு விளைநிலங்கள் பாழாகிவிட்டன. இங்கு தொழில் வளத்தைப் பெருக்க வேண்டும்.

குளங்கள் ஏரிகளை பாதுகாக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி எனது தலைமையில் விரைவில் போராட்டம் நடைபெறும். தமிழகத்தில் மது, கஞ்சாவை ஒழித்தால்தான் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படும். முதல்வர் தொழில் முதலீட்டை ஈர்க்க வெளிநாடு சென்றுள்ளதை வரவேற்கிறேன். அதேவேளையில் திமுகவினர் சுமார் ரூ. 2 லட்சம் கோடியை மலேசியா, சிங்கப்பூர், மோரீஷஸ் உள்ளிட்ட நாடுகளில் முதலீடு செய்கிறார்கள். அதை தமிழ்நாட்டில் முதலீடு செய்தால் முதல்வர் வெளிநாடுகளுக்கு செல்லவேண்டிய அவசியமில்லை என்றார்.

இக்கூட்டத்தில் மாநில இளைஞரணித் தலைவர் ஷியாம் கிருஷ்ணசாமி முன்னிலை வகித்தார். வடக்கு மாவட்டச் செயலர் செல்லத்துரை, வழக்குரைஞர் அணிச் செயலர் ரமேஷ், ஒன்றியச் செயலர்கள் மணிகண்டன், பாஸ்கர், மாவட்ட இணைச்செயலர் மருதன் வாழ்வு ரவி, மாநில துணைச் செயலர் கிருபை ராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பஞ்சாப் நேஷனல் பேங்க்
பஞ்சாப் நேஷனல் வங்கி
The name you can BANK upon !

வட்டார SASTRA, வட்டார அலுவலகம் திருச்சி, PNB ஹவுஸ், திருச்சி தஞ்சாவூர் சாலை, கைலாசபுரம், திருச்சி - 620 014. தொ. பே.: 0431 - 2521165, மின்னஞ்சல் : cs8327@pnb.co.in

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு கடனீட்டுச் சொத்துக்களை ஒரக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 (விதி 8(6) சேர்த்து வாசிக்கவும்) பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8 (6)ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின் ஏல அறிவிப்பு

பஞ்சாப் நேஷனல் வங்கியில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை பஞ்சாப் நேஷனல் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆக்கபூர்வ / அடையாளபூர்வ / மெய்நிலை சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களிடமிருந்து பெற வேண்டிய கீழே குறிப்பிட்டுள்ள கடன் தொகை மற்றும் அதற்கான வட்டி, இதர செலவுகளையும் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் மின் ஏல விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது. சொத்துக்களின் குறைந்த பட்ச கேட்பு விலை மற்றும் பேணவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கணக்கின் பெயர்: : திரு. மோகன் M

கடன்தாரர்/ஜாமீன்தாரர் கணக்கின் பெயர் மற்றும் முகவரி:
கடன்தாரர்/அடமானதாரர்: (1) திரு. மோகன் M, த/பெ. மாடசாமி, 2/67, இந்திரா நகர், மேல ஆம்பூர், கீழ ஆம்பூர் (Ct), திருநெல்வேலி, அம்பாசமுத்திரம், தமிழ்நாடு-627418. (2) திருமதி. சந்திர மோகன், க/பெ. மோகன், எண். 2/68, இந்திரா காலனி தெரு, இந்திராநகர், மேல ஆம்பூர், கருத்தப்பிள்ளையூர், திருநெல்வேலி டவுன், அம்பாசமுத்திரம், தமிழ்நாடு- 627418. ஜாமீன்தாரர்: திருமதி. கண்ணம்மா, க/பெ.முருகன், முகவரி.1) 8/28 வெயிலான தெரு, பிரம்மதேசம், திருநெல்வேலி, தமிழ்நாடு- 627413.முகவரி.2) எண். 110/E19, துளசிவனதெரு, பரணி நகர், வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி, தமிழ்நாடு- 627003,

அசையாச் சொத்தின் விவரங்கள்: சோன்மாதேவி பதிவு மாவட்டம் மற்றும் விக்ரமசிங்கபுரம் சார்பதிவு அலுவலகத்திற்குட்பட்ட மேல ஆம்பூர் கிராமத்தில் அமைந்துள்ள நத்தம் சர்வே எண்.369/1A தென்னும், இந்திரா நகர், வார்டு எண்.2 இல் அமைந்துள்ள அனைத்து வசதிகள் கொண்ட இடத்தின் நாற்பரப்புகள்: கிழக்கிலிருந்து மேற்காக 6.20 மீட்டர், வடக்கிலிருந்து தெற்காக 9.80 மீட்டர், இதற்கு சமமான 60.76 சதுர மீட்டர் விஸ்தீரணமுள்ள நிலத்தின் எல்லைகள்: வடக்கில்: மாடசாமி வகையறாவின் உரிமை பெற்ற நிலம்; கிழக்கில்: ராஜசேகர் அவர்களின் உரிமை பெற்ற நிலம்; தெற்கில்: பிரதான சாலை; மேற்கில்: நடராஜன் அவர்களின் உரிமை பெற்ற நிலம்.

குறைந்தபட்ச கேட்பு விலை : ரூ.18,28,000/- பேணவேண்டிய தொகை : ரூ.1,82,800/-

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதும் இல்லை.

கிளையின் பெயர்: ஸ்ரீபுரம் (திருநெல்வேலி)	
13 (2) SARFAESI சட்டம் 2002 - ன் படி கோரிக்கை அறிவிப்பு தேதி	18.10.2023
13 (4) SARFAESI சட்டம் 2002 - ன் படி சுவாதீன அறிவிப்பு தேதி	23.02.2024
சுவாதீன நிலை : அடையாள / மெய்நிலை / ஆக்கப்பூர்வ	அடையாள
நிலுவைத் தொகை: 31.07.2024 அன்றுள்படி ரூ.18,28,487.19 (ரூபாய் பதினெட்டு இலட்சத்து இருபத்து எட்டு ஆயிரத்து நானூற்று எண்பத்து ஏழு மற்றும் பைசா பத்தொன்பது மட்டும்) + 01.08.2024 முதல் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.	

மின் ஏலத் தேதி மற்றும் நேரம் 08.10.2024 (செவ்வாய்க்கிழமை) காலை 10மணி முதல் மாலை 4 மணி வரை

பேணவேண்டிய தொகை செலுத்த வேண்டிய கடைசி தேதி : மின் ஏலத்தின் தொடக்கத்தில் அல்லது அதற்கு முன்

ஏல உயர்வுத் தொகை ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனையானது கடனீட்டுச் சொத்துக்கள் நீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002ல் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பொருத்து மற்றும் பின்வரும் கூடுதல் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. 1. மேற்குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் "உள்ள இடத்தில் உள